இயல்
எட்டு

# அறத்தால் வருவதே இன்பம்



## கற்றல் நோக்கங்கள்

- அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்று அவை கூறும் கருத்துகளைப் பின்பற்றுதல்
- அயோத்திதாசரின் சிந்தனைகள் வழியாகச் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை உணர்தல்
- நவீனச் சிறுகதைகளைப் படித்து அவற்றின் நுட்பங்களை அறியும் திறன்பெறுதல்
- யாப்பிலக்கணச் செய்திகளை அறிந்து கவிதை வடிவங்களைப் புரிந்துகொள்ளுதல்

கவிதைப்பேழை

இயல் எட்டு

# ஒன்றே குலம்

J7ZLDN

**நுழையும்முன்**

மனிதர்களிடையே பிறப்பால் உயர்வுதாழ்வு பாராட்டுவது தவறானது. உலகமக்கள் அனைவரையும் உடன்பிறந்தாராகக் கருதி அன்புகாட்ட வேண்டும். பிறருக்கு ஏற்படும் பசி முதலிய துன்பங்களைத் தமக்கு ஏற்பட்டதாகக் கருதி அவற்றைப்போக்க முயல்வதே மனிதர்களின் சிறந்த கடமையாகும். அதுவே இறைத்தொண்டாகும். இக்கருத்துகளை விளக்கும் திருமூலரின் பாடல்களை அறிவோம்.

*ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே

படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே*

– திருமூலர்

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| நமன் | – எமன் | நாணாமே | – கூசாமல் |
| சித்தம் | – உள்ளம் | உய்ம்மின் | – ஈடேறுங்கள் |
| நம்பர் | – அடியார் | ஈயில் | – வழங்கினால் |

படமாடக்கோயில் – படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில்

## பாடலின் பொருள்

மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துகளை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை. கூசாமல் செல்லவேண்டிய நல்வழி இதைவிட வேறு இல்லை. உலகத்து மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழவேண்டுமாயின் இவற்றை நினைத்து ஈடேறுங்கள்.

படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒருபொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் கோயிலாகிய உடம்பையுடைய அடியார்களுக்குச் சேராது. அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும்.



8th Std Tamil _20-12-2019.indd 168 03-01-2020 19:34:52

## நூல் வெளி



அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகவும் பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் கருதப்படுபவர் திருமூலர். இவர் இயற்றிய திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. எனவே, இந்நூலைத் தமிழ் மூவாயிரம் என்பர். இது பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது.

திருமந்திரம் என்னும் நூலிலிருந்து இரண்டு பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

*பிறர் துன்பம் கண்டு வருந்தி அவர்களுக்குத் தொண்டுசெய்த சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.*

## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் _____ க் கண்டு அஞ்சமாட்டார்கள்.
   அ) புலனை　　ஆ) அறனை　　இ) நமனை　　ஈ) பலனை
2. ஒன்றே _____ என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.
   அ) குலம்　　ஆ) குளம்　　இ) குணம்　　ஈ) குடம்
3. 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) நம் + இல்லை　　ஆ) நமது + இல்லை
   இ) நமன் + நில்லை　　ஈ) நமன் + இல்லை
4. நம்பர்க்கு + அங்கு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) நம்பரங்கு　　ஆ) நம்மார்க்கு　　இ) நம்பர்க்கங்கு　　ஈ) நம்பங்கு

*குறுவினா*

1. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?
2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்யவேண்டியது யாது?

*சிறுவினா*

மக்களுக்குச் செய்யவேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

*சிந்தனை வினா*

அன்றாட வாழ்வில் நாம் பிறருக்கு எத்தகைய உதவிகளைச் செய்யலாம்?

கவிதைப்பேழை

# இயல் எட்டு

# மெய்ஞ்ஞான ஒளி

918ASF

**நுழையும்முன்**

எப்படியும் வாழலாம் என்பது விலங்குகளின் இயல்பு. இப்படித்தான் வாழ வேண்டும் என்பது மனிதப் பண்பு. நாம் எப்படி வாழ வேண்டும் என்பதை அறிஞர்கள் பலர் எடுத்துக் கூறியுள்ளனர். ஐம்பொறிகளின் ஆசையை அடக்கி, அறிவின் வழியில் சென்றால் வாழ்வாங்கு வாழலாம். அவ்வாறு வாழ வேண்டிய முறைகளை விளக்கும் குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்களை அறிவோம்.

*கள்ளக் கருத்துகளைக் கட்டோடு அறுத்தவருக்கு*
*உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பராபரமே!*

*காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத*
*ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே!*

*அறிவை அறிவோருக்கு ஆனந்த வெள்ளமதாய்க்*
*கரையறவே பொங்கும் கடலே பராபரமே!*

*அடக்கத் தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்*
*படிக்கப் படிப்பு எனக்குப் பகராய் பராபரமே!*

– குணங்குடி மஸ்தான் சாகிபு

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| பகராய் | – தருவாய் | பராபரம் | – மேலான பொருள் |
| ஆனந்த வெள்ளம் | – இன்பப்பெருக்கு | அறுத்தவருக்கு | – நீக்கியவர்க்கு |

## பாடலின் பொருள்

மேலானபொருளே! தம் தீய எண்ணங்களை அடியோடு அழித்தவர்கள் மனத்துள்ளே எழுந்தருளி இருக்கும் உண்மையான அறிவு ஒளி ஆனவனே! உன் திருவடிகளின்மேல் பற்று வைக்காமல், பணத்தின்மீது ஆசை வைத்ததால் நான் மனம் கலங்கி அலைகின்றேன்.

நீ உண்மை அறிவினை உணர்ந்தவர்களின் உள்ளத்துக்குள் இன்பப் பெருக்காய்க் கரைகடந்து பொங்கிடும் கடலாக விளங்குகின்றாய். மேலானபொருளே! ஐம்பொறிகளை அடக்கி ஆள்வது மிகவும் அரியசெயலாகும். அப்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து அருள்செய்வாயாக.

**நூல் வெளி**

குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் சுல்தான் அப்துல்காதர். இவர் இளம் வயதிலேயே முற்றும் துறந்தவராக வாழ்ந்தார். சதுரகிரி, புறாமலை, நாகமலை முதலிய மலைப்பகுதிகளில் தவம் இயற்றி ஞானம் பெற்றார். எக்காளக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலான நூல்களை இயற்றியுள்ளார். நம் பாடப்பகுதி குணங்குடியார் பாடற்கோவை என்னும் தொகுப்பில் இருந்து எடுக்கப்பட்டது.

## கற்பவை கற்றபின்

கண்ணி வகையில் பாடப்பட்ட வேறு பாடல்களைத் தொகுத்து எழுதுக

## மதிப்பீடு

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மனிதர்கள் தம் _____ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.

   அ) ஐந்திணைகளை　　ஆ) அறுசுவைகளை

   இ) நாற்றிசைகளை　　ஈ) ஐம்பொறிகளை

2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் _____.

   அ) பகர்ந்தனர்　　ஆ) நுகர்ந்தனர்　　இ) சிறந்தனர்　　ஈ) துறந்தனர்

3. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   அ) ஆனந்த + வெள்ளம்　　ஆ) ஆனந்தன் + வெள்ளம்

   இ) ஆனந்தம் + வெள்ளம்　　ஈ) ஆனந்தர் + வெள்ளம்

4. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) உள்ளேயிருக்கும்　　ஆ) உள்ளிருக்கும்　　இ) உளிருக்கும்　　ஈ) உளருக்கும்

### குறுவினா

1. உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?
2. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?

### சிறுவினா

குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?

### சிந்தனை வினா

ஐம்பொறிகளைக் கொண்டு நாம் செய்யவேண்டிய நற்செயல்கள் யாவை?



8th Std Tamil _20-12-2019.indd 171　　03-01-2020 19:34:53

உரைநடை உலகம்

**இயல் எட்டு**

# அயோத்திதாசர் சிந்தனைகள்

CEWCZQ

**நுழையும்முன்**

*ஒருவருடைய வாழ்க்கை என்பது பிறந்து, வாழ்ந்து, மறைவதோடு முடிந்துவிடுவதில்லை. நேர்மையான சிந்தனையும் செயலும் ஒருவருக்கு வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுத்தருகின்றன. ஒரு காலத்தில் மக்களின் மனத்தில் நின்றவர்கள் பிற்காலத்தில் மக்கள் நினைவிலிருந்து மறைந்துபோகின்றனர். காலவெள்ளத்தில் மக்களால் மறக்கப்பட்டு, பின்னர் நினைவுக்கு வரும் சிந்தனையாளர்களும் உண்டு. அத்தகைய சிந்தனையாளர் ஒருவரைப் பற்றி அறிவோம்.*



அயோத்திதாசர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர். இவர் பண்டைய இலக்கிய, சமூக, சமய, வரலாற்று ஆய்வுகளில் ஈடுபட்டார். அவற்றின் அடிப்படையில் புதிய சமுதாயத்தைக் கட்டமைக்கும் பெரும்பணியில் ஈடுபட்டார். சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலாக்கியவர்கள் தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஆவர். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அயோத்திதாசர்.

நல்ல சிந்தனை, சிறப்பான செயல், உயர்வான பேச்சு, உவப்பான எழுத்து, பாராட்டத்தக்க உழைப்பு ஆகிய ஐந்து பண்புகளையும் ஒருசேரப்பெற்ற சிந்தனையாளர்தான் அயோத்திதாசர். இவரைத் தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றுவர்.


## வாழ்க்கை

அயோத்திதாசர் 1845ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள் சென்னையில் பிறந்தார். இவரது இயற்பெயர் காத்தவராயன் என்பதாகும். இவர் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தவர் என்பதால் பள்ளிப்பருவத்தில் பல இன்னல்களுக்கு உள்ளானார். அயோத்திதாசப்



8th Std Tamil _20-12-2019.indd 172 03-01-2020 19:34:53

பண்டிதர் என்பவரிடம் இவர் கல்வியும் சித்தமருத்துவமும் பயின்றார்; தம்மீது அன்பு காட்டிய அந்த ஆசிரியரது பெயரையே தமது பெயராக வைத்துக்கொண்டார். நீலகிரிக்குச் சென்று அங்கு வாழ்ந்த அயோத்திதாசர், திருமணத்திற்குப் பிறகு பர்மாவுக்குச் சென்றார். அங்குக் கூலித்தொழிலாளர்களாக வேலை செய்துவந்த தமிழர்களின் உரிமைகளுக்காக இவர் பாடுபட்டார். பின்னர் இவர் தமிழ்நாட்டுக்குத் திரும்பி ஒடுக்கப்பட்டோர் உரிமைக்காகவும் அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார்.


தமிழன்

### சிந்தனைகளின் அடித்தளம்

அயோத்திதாசர் தமிழ் மட்டுமன்றி, பாலி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருந்தார்; இலக்கியம், இலக்கணம், கணிதம், மருத்துவம், சமயத்தத்துவம் உள்ளிட்ட பல்துறை நூல்களையும் ஆழ்ந்து கற்றார். இத்தகைய ஆழ்ந்த படிப்பே அவரது புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

### இதழ்ப்பணி

1907ஆம் ஆண்டு சென்னையில் ஒருபைசாத்தமிழன் என்னும் வாரஇதழை காலணா விலையில் தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார். உயர்நிலையையும் இடைநிலையையும் கடைநிலையையும் பாகுபடுத்தி அறியமுடியாத மக்களுக்கு நீதி, நேர்மை, சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதே இவ்விதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார். இவர் 'தமிழன்' இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமன்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஊட்டினார். இவர் தமது நூல்கள் மூலமாகவும் தமது சீர்திருத்தச் சிந்தனைகளை வெளியிட்டார்.

### கல்விச் சிந்தனைகள்

ஒரு மனிதனின் அறிவு வளர்ச்சிபெற வேண்டுமானால், கல்வி அறிவு அவசியம் என்று அயோத்திதாசர் கருதினார். நிலவு நாளும் வளர்ந்து முழுநிலவாகி ஒளிவீசுவதுபோல் கல்வி நிறுவனங்களில் அறிவை வளர்க்கும் நூல்கள் கற்பிக்கப்படவேண்டும்; கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம்வளர்த்தல் போன்றவற்றையும் கற்கவேண்டும் என்று இவர் வலியுறுத்தினார். சங்ககாலப் பெண்களைப்போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக்கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றும் இவர் எடுத்துரைத்தார்.

#### தெரிந்து தெளிவோம்

**அயோத்திதாசர் பதிப்பித்த நூல்கள்**

போகர் எழுநூறு, அகத்தியர் இருநூறு, சிமிட்டு இரத்திரனச் சுருக்கம், பாலவாகடம்.



8th Std Tamil _20-12-2019.indd 173 03-01-2020 19:34:53

#### வாழும் முறை

மக்கள் வாழவேண்டிய முறை பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகள் சிறப்பானவையாகும். மக்கள் அனைவரும் அன்புகொண்டு வாழவேண்டும்; கோபம், பொறாமை, பொய், களவு போன்றவற்றைத் தம் வாழ்விலிருந்து நீக்கி வாழவேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது; மேலும் மதியை அழிக்கும் போதைப்பொருள்களைக் கையாலும் தொடுதல் கூடாது; ஒரு குடும்பத்தில் அன்பும் ஆறுதலும் நிறைந்தால், அக்குடும்பம் வாழும் ஊர் முழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும்; ஊர்கள் அன்பும் ஆறுதலும் பெறுமானால் நாடு முழுவதும் அன்பும் ஆறுதலும் பெற்றுத் திகழும்; இத்தகைய நாட்டில் புலியும் பசுவும் ஒரே நீர்த்துறையில் நீர் அருந்தும் என்பவை அயோத்திதாசர் கருத்துகள்.

> **தெரிந்து தெளிவோம்**
>
> என் பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கும் சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் பண்டிதமணி அயோத்திதாசரும் தங்கவயல் அப்பாதுரையாரும் ஆவார்கள்.
>
> – தந்தை பெரியார்

#### தலைமைத் தகுதி

ஒரு நாட்டுக்கு வழிகாட்டும் தலைவர் எத்தகையவராக இருக்கவேண்டும் என்பதை அயோத்திதாசர் விளக்குகிறார். 'மக்களும் அவர்தம் நோக்கங்களும் பெருமைப்படத்தக்கனவாக இருக்கவேண்டுமானால், அவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டி அமையவேண்டும். அவர் மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல்பெற்றவராக, நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட தலைவரை வணக்கத்திற்கு உரியவராக மக்கள் ஏற்பார்கள்; கடவுளெனத் துதிப்பார்கள்' என்பது அயோத்திதாசர் கருத்து.

#### மக்களும் மழையும்

மக்களையும் மழையையும் தொடர்புபடுத்தி அயோத்திதாசர் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கதாகும். 'வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. ஞானிகள் இல்லாமைக்குக் காரணம் நீதியும் நெறியும் வாய்மையும் நிறைந்த அறிவாளிகள் இல்லாமையாகும். அறிவாளிகள் இல்லாமைக்குக் காரணம் ஆட்சித்திறனும் அன்பும் உடைய அரசர்கள் இல்லாமையே. அத்தகைய அரசர்கள் இல்லாமைக்குக் காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே என்று கூறுவதன்மூலம் நல்ல குடிமக்கள் இல்லாத நாட்டுக்கு இயற்கைகூட உதவாது' என்கிறார் அயோத்திதாசர்.

> **தெரிந்து தெளிவோம்**
>
> **அயோத்திதாசர் எழுதிய நூல்கள்**
>
> புத்தரது ஆதிவேதம், இந்திரர் தேச சரித்திரம், விவாக விளக்கம், புத்தர் சரித்திரப்பா முதலியன.
>
> திருவள்ளுவர், ஔவையார் ஆகியோரின் படைப்புகளுக்குப் பௌத்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதிய விளக்கங்களை எழுதியுள்ளார்.

#### சமத்துவம்

அயோத்திதாசர், மக்கள் அனைவரும் சமஉரிமை பெற்றுச் சமத்துவமாக வாழவேண்டும் என்று விரும்பினார். கல்வி, வேளாண்மை, காவல்துறை

போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கவேண்டும்; ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் போன்றவற்றிலும் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்; இவற்றில் இந்து, பௌத்தர், கிறித்துவர், இசுலாமியர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்ற அனைவருக்கும் வாய்ப்பளிக்கவேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்திவந்தார் அயோத்திதாசர்.

**தெரிந்து தெளிவோம்**

சென்னை தாம்பரத்தில் உள்ள சித்த ஆராய்ச்சி மையத்துடன் இணைந்த மருத்துவமனைக்கு அயோத்திதாச பண்டிதர் மருத்துவமனை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### திராவிட மகாஜன சங்கம்

அயோத்திதாசர் தமது கொள்கைகளை வலியுறுத்தவும் ஒடுக்கப்பட்டோர் உரிமைகளைப் பாதுகாக்கவும் 1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வமைப்பு சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல், பொதுமருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள்தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காகவும் போராடியது.

### அரசியல் விடுதலையும் மக்கள் உரிமையும்

விடுதலை என்பது வெறும் ஆட்சிமாற்றம் மட்டுமன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமையவேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. 'சுயராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது; மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அஃது அமையவேண்டும். மக்கள் வாழ்க்கையில் மாற்றம் உண்டானால் ஒழிய, நாடு முன்னேற முடியாது' என்று ஆணித்தரமாகக் கூறினார் அயோத்திதாசர்.

### தனித்தன்மை

அயோத்திதாசர் காலத்தில் பண்டிதர், புலவர், நாவலர், பேச்சாளர், எழுத்தாளர் எனப் பலர் இருந்தனர். ஆயினும், பகுத்தறிவு, இலக்கியம், சமூகம், சமயம், அரசியல், வரலாறு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றில் அக்கறைகொண்டு புதிய சிந்தனைகளை விதைத்தவர் அயோத்திதாசரே. எனவே, அவரை அன்றைய தமிழர்கள் தனித்தன்மை உடைய சிந்தனையாளராக மதித்தனர்.

அயோத்திதாசரின் சிந்தனைகள் ஒரு தனிமனிதரின் சிந்தனைகளாக மட்டும் அமையாமல், அகன்ற சமுதாயத்தில் விழிப்புணர்வையும் எழுச்சியையும் ஏற்படுத்தும் சித்தாந்தங்களாக விளங்கின என உறுதியாகக் கூறலாம்.

## கற்பவை கற்றபின்

*சமூகச் சீர்திருத்தத்திற்குப் பாடுபட்ட சான்றோர்களின் பெயர்களைத் திரட்டுக.*

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அயோத்திதாசர்_ _ _ _ _சமூகச்சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார்.

   அ) தமிழக ஆ) இந்திய இ) தென்னிந்திய ஈ) ஆசிய

2. அயோத்திதாசர் நடத்திய இதழ்_ _ _ _ _.

   அ) ஒருபைசாத் தமிழன் ஆ) காலணாத் தமிழன்

   இ) அரைப்பைசாத் தமிழன் ஈ) அரையணாத் தமிழன்

3. கல்வியோடு _ _ _ _ _ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து.

   அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும்

   இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும்

4. அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது _ _ _ _ _ _ _ _.

   அ) ஆழ்ந்த படிப்பு ஆ) வெளிநாட்டுப்பயணம்

   இ) இதழியல் பட்டறிவு ஈ) மொழிப்புலமை

5. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது _ _ _ _ _ _ _ _.

   அ) வானம் ஆ) கடல் இ) மழை ஈ) கதிரவன்

**குறுவினா**

1. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்கவேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?
3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?

**சிறுவினா**

1. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.
2. அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?

**நெடுவினா**

வாழும் முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

**சிந்தனைவினா**

ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்க வேண்டிய உயர்பண்புகள் யாவை?




8th Std Tamil _20-12-2019.indd 176 03-01-2020 19:34:53

விரிவானம்

**இயல் எட்டு**

# மனித யந்திரம்

XTFZ77




*ஒரே மனிதனுக்குள் இரண்டு வகையான பண்புகள் புதைந்துகிடக்கும் என்கின்றனர் உளவியல் அறிஞர்கள். நல்லதையே நினைத்து, நல்லதையே செய்வது ஒன்று; தீயனவற்றைச் செய்யத் தூண்டுவது மற்றொன்று. இவற்றுள் எப்பண்பு மேலோங்கி இருக்கிறதோ, அத்தகைய செயல்களையே மனிதர்கள் செய்வர். தவறு செய்யும் எண்ணம் தோன்றும்போது அதனை அடக்கி, நேர்மையாக வாழ்வதே உயர்ந்த மனிதர்களின் இயல்பு. இக்கருத்துகள் பொதிந்த கதையொன்றை அறிவோம்.*

மீனாட்சிசுந்தரம் ஒரு ஸ்டோர் குமாஸ்தா. அவருக்குச் சென்ற நாற்பத்தைந்து வருடங்களாக அதே பாதை, அதே வீடு, அதே பலசரக்குக் கடையின் கமறல்தான் விதி. கடையும் மீனாட்சிசுந்தரமும் ஒன்றாக வளர்ந்தார்கள்; ஆனால் ஒட்டி வளரவில்லை. கடையில் வரவுசெலவு வளர்ந்தது; மீனாட்சிசுந்தரத்துக்குக் கவலையும் வளர்ந்தது.

மீனாட்சிசுந்தரம் பற்றுவரவுக் கணக்குகளில் உள்ள சிக்கல்களையெல்லாம் அற்புதமாகத் தீர்த்துவைப்பார். அந்தக்காலத்தில் புன்னை எண்ணெய்க் குத்துவிளக்கடியில் இரவு பன்னிரண்டுமணிவரை மல்லாடுவார். இப்பொழுதும் அந்த மல்லாட்டத்திற்கெல்லாம் குறைச்சல் இல்லை; ஆனால் இப்பொழுது மின்சாரவிளக்கும் விசிறியும் உடன்விழித்திருக்கும்.

அவரது சம்பளமும் ஆமைவேகத்தில் 'ஓடி' மாதத்துக்கு இருபது ரூபாய் என்ற எல்லையை எட்டிவிட்டது. வீட்டு வரவுசெலவுக் கணக்கு மட்டும் அவருடைய இந்திரஜால வித்தைகளுக்கெல்லாம் மீறி, உலகளந்த பெருமாளாக, சென்ற நாற்பத்தைந்து வருடங்களாகப் பெருகிக் கொண்டு வருகிறது.

மழையானாலும் பனியானாலும் ஆற்றில் குளித்துவிட்டு ஈரவேட்டியைச் சற்று உயர்த்திய கைகளால் பின்புறம் பறக்கவிட்டுக்கொண்டு, உலர்ந்தும் உலராத நெற்றியில் விபூதி, குங்குமம், சந்தனம் விகசிக்க அவர் செல்லும் காட்சியைச் சென்ற நாற்பத்தைந்து வருடங்களாகக் கண்டவர்களுக்கு நன்றாக முடுக்கிவிடப்பட்ட பழுதுபடாத யந்திரம் ஒன்று நினைவிற்கு வரும்.

மீனாட்சிசுந்தரம் மிகவும் சாது; அதாவது, விநயமாக இருக்கவேண்டும், தம்மைப் பாதுகாத்துக்கொள்ள உண்மை, நாணயம் முதலிய பழக்கங்களைக் கைக்கொள்ளவேண்டும் என்று உறுதிப்பட்டவர். ஆனால் பெட்டிப் பாம்பாக அடங்கிக்கிடக்கும் அவரது உள்ளத்தில், அலாவுதீன் ஜீனியைப்போல் ஆசை பூதாகாரமாய் விரிந்து, அவரது சித்தப்பிரபஞ்சத்தையே கவித்து ஆக்கிரமித்துக்கொண்டது.

இந்தமனம் இருக்கிறதே, மீனாட்சிசுந்தரத்துக்கும் அஃது உண்டு. நீறுபூத்த நெருப்பை வேதாந்திகள் பெரியவிஷயங்களுக்கு உபமானம் சொல்லுவார்கள். ஆசையைப் பொறுத்தவரை அந்த உபமானத்தால் மீனாட்சிசுந்தரம் பெரியமனுஷர்தான்.

'மீனாட்சியா! அந்த அப்பாவிப் பயல்!' என்று பலர் துச்சமாகக் கருதுவார்கள். முகத்திற்கெதிரேயும் சொல்லுவார்கள். அப்படிப்பட்ட 'அப்பாவி'ப் பிராணியின் மனத்தில் புகைந்து கவிகிறது ஆசை. வீட்டில் குழந்தைக்குப் பால் தட்டாமலிருக்க – ஏன், பால்விற்று நாலுகாசும் சம்பாதிக்க – மாடும் கன்றும் வாங்கவேண்டும்! தெற்குத்தெரு மாவன்னாவுக்கு 'மேடோவர்' செய்தநிலத்தைத் திருப்பவேண்டும். இதுமட்டுமா? கால்மேல் கால்போட்டு, 'ஏ மீனாட்சி!' என்று தாம் அழைக்கப்படுவதுபோல், தம் இஷ்டப்படி ஆட ஒரு மீனாட்சி ஸ்டோர் கடையும் கைக்குள்வரவேண்டும்.

ஒருமுறை கொழும்புக்குப் போய்விட்டுத் தங்க அரைஞாண், கடிகாரச்சங்கிலி, வாட்டசாட்டமான உடம்பு, கையில் நல்ல ரொக்கம் முதலிய சகல வைபவங்களுடனும் திரும்பவேண்டும். தெருவில் எதிரே வருகிறவர் எல்லாரும் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, பல்லை இளித்தவண்ணம் 'அண்ணாச்சி சௌக்கியமா?' என்று கேட்க வேண்டும்!

தினசரி பணப்புழக்கம் எல்லாம் அவர் கையில்தான். கடைசியாய், தனியாகக் கடையைப் பூட்டிச்சாவியை எடுத்துக்கொண்டு போகிறவரும் அவர்தான். அதேசமயத்தில்தான் கடைக்குக் கூப்பிடுகிற தூரத்தில் இருக்கும் ரயில்வே ஸ்டேஷனில் ஐந்து நிமிஷம் நின்றுவிட்டுத் தூத்துக்குடி வண்டி புறப்படுகிறது. டிக்கட் வாங்கிக்கொண்டு ராத்திரியோடு ராத்திரியாகக் கம்பி நீட்டிவிடலாம். டிக்கட்டுக்கு மட்டிலும் பணம் எடுக்கத் தினசரி கடையில் புரளும் பணம் போதும்.

மூலைத்தெருவில் மற்ற இடங்களெல்லாம் ஒடுங்கிவிட்டன. ஸ்டோரில் பெட்டியடிமேல் ஒற்றை மின்சாரவிளக்குப் பிரகாசிக்கிறது. மீனாட்சிசுந்தரம் ஓலைப்பாயில் உட்கார்ந்துகொண்டு மேஜையின் மேலுள்ள சிட்டைப்புத்தகத்தில் ஏதோ பதிந்துகொண்டு இருக்கிறார்.

"சுப்புவின் கணக்கு. நாலு, நாலரை, நாலரையே மாகாணி, நாலரையே மாகாணியும் ஒரு சல்லியும், நாலரையே மாகாணி ஒரு சல்லி, ஒருதுட்டு, நாலு, ஒம்பது, அஞ்சு சல்லி!... சவத்துப்பயலுக்குக் குடுத்துக் குடுத்துக் கட்டுமா? நாளைக்கு வரட்டும் சொல்லறேன்" நெற்றியில் வழியும் வியர்வையைத் துடைத்துவிட்டு ராமையாவின் பேரேட்டைத் திருப்பிக்கூட்ட ஆரம்பித்தார். "வீசம், அரைக்கால், அரையே அரைக்கால்..."

மீனாட்சிசுந்தரத்துக்கு மனம் கணக்கில் லயிக்கவில்லை. பெட்டியில் மூடி வைத்தார். 'தூத்துக்குடி வண்டி இன்னும்

### தெரிந்து தெளிவோம்

மாகாணி, வீசம் போன்றவை அக்காலத்தில் வழக்கிலிருந்த அளவைப்பெயர்களாகும்.

அணா, சல்லி, துட்டு என்பது அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த நாணயப் பெயர்கள் ஆகும். பதினாறு அணாக்கள் கொண்டது ஒரு ரூபாய். அதனால்தான் இன்றும் பேச்சுவழக்கில் அரை ரூபாயை எட்டணா என்றும் கால் ரூபாயை நாலணா என்றும் கூறுகின்றனர்.



8th Std Tamil _20-12-2019.indd 178 03-01-2020 19:34:54

புறப்படவில்லையே!' என்ற எண்ணம் திடீரென்று உதித்தது. 'சவத்தைக் கட்டி எத்தனை நாள்தான் மாரடிப்பது!' என்று முணுமுணுத்தார். நெற்றியில் குபீர் என்று வியர்வை எழும்பியது. பெட்டிச்சொருகை அனாவசிய பலத்தை உபயோகித்து வெளியே இழுத்தார். உள்ளேயிருந்த சில்லறையும் ரூபாயும் குலுங்கிச் சிதறின. செம்பு, நிக்கல், வெள்ளி என்று பாராமல் மடமடவென்று எண்ணினார். நாற்பதும் சில்லறையும் இருந்தது. அவசர அவசரமாக எடுத்து மடியில் கொட்டிக்கொண்டு, விளக்கை அணைத்து, மடக்குக் கதவுகளைப் பூட்டினார்.

சாவிக்கொத்து கையில் இருக்கிற உணர்வுகூடஇல்லாமல் வேகமாக ஸ்டேஷனை நோக்கி நடந்தார்.

'நாற்பத்தைந்து வருஷமாக உழைத்துப் போட்டும் என்ன பலன்? நாக்குக்கு ருசியாகச் சாப்பிட முடிந்ததா? என்ன பண்ணிவிடுவான்?'

கொஞ்சதூரம் சென்றபிறகுதான் செருப்பைக்கூடக் கடையிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டார் என்ற உணர்வு தட்டியது.

நல்லகாலமாக எதிரில் யாரையும் காணோம். 'பார்த்தால்தான் என்ன? கடையைப் பூட்டினபிறகு நேரே வீட்டிற்குத்தான் போகவேண்டுமா? நம்ம நினைப்பு அவனுக்கெப்படி தெரியும்?'

ஸ்டேஷனுக்கு வந்தாய்விட்டது. பெட்ரோமாக்ஸ் விளக்கடியில் தூங்கும் சில்லறைச் சிப்பந்திகள், பக்கத்து வெற்றிலைபாக்குக் கடையில் வாயடிக்கும் போர்ட்டர்கள்! வெளிக்கேட்டில் அவ்வளவு கூட்டம் இல்லை. ரயிலுக்குக் கூட்டம்இருக்காததும் நல்லதுதான் என்று நினைத்து உள்ளுக்குள்சந்தோஷப்பட்டுக்கொண்டார்.

டிக்கட் கவுண்டரில் பத்தேகாலணாவைக் கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொண்டு பிளாட்பாரத்தில் நுழைந்தார். வண்டி வந்து நின்றுகொண்டிருக்கிறது. புறப்பட இன்னும் பத்து நிமிஷம். ஒருவரும் இல்லாத தனி வண்டியில் ஏறி, ஜன்னல் அண்டையில் உட்கார்ந்தார். வண்டி எப்பொழுது புறப்படும் என்பதை ஆவலாக அறிய எஞ்சின் பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்.




"மீனாட்சிசுந்தரம்... ஏது இந்த ராத்திரியில்!" என்றது கம்பீரமான ஒருகுரல். வேறு ஒருவரும் இல்லை. ரயில்வே போலீஸைச் சேர்ந்த அவரது நண்பர் கலியாணசுந்தரம். திடுக்கிட்டுத் திரும்பினார்.



8th Std Tamil _20-12-2019.indd 179 03-01-2020 19:34:54

போலீஸ்காரர்! மீனாட்சிசுந்தரம் நண்பரைப் பார்க்கவில்லை; காக்கி உடையைத்தான் பார்த்தார்! தன்னையறியாமல் அவரது வாய், "தூத்துக்குடிவரை!" என்றது.

"என்ன அவசரம்! நான் உங்களை மணியாச்சியில் பார்க்கிறேன்!" என்று சொல்லி, அளவெடுத்து வைக்கும் பெருமிதமான நடையுடன் ஸ்டேஷன் மாஸ்டரை நாடினார் கலியாணசுந்தரம்.

மீனாட்சிசுந்தரத்துக்கு நுனிநாக்குமுதல் அடித்தொண்டைவரை ஒரே வறட்சி; கண்கள் சுழன்றன.

"கலர்! சோடா!" என்று நீட்டினான் சோடாக்காரன். 'பூப்!' என்று ஏப்பமிட்டுக்கொண்டே ஓரணாவை அவன் கையில் கொடுத்துவிட்டுப் பலகையில்சாய்ந்து கண்ணை மூடினார். 'கலியாணி பார்த்துவிட்டானே! நாளைக்கு நம் குட்டு வெளிப்பட்டுப் போகுமே!'

ரயில் விஸில் கிரீச்சிட்டது. மீனாட்சிசுந்தரம் அவசர அவசரமாகக் கதவுப்பக்கம் வந்து ரயிலை விட்டு இறங்கினார்.

மெதுவாக, நிதானமாக ஸ்டேஷனைவிட்டு வெளியேறி ஸ்டோர்பக்கமாக நடந்தார். வழியில் சிறிதுதூரம் செல்கையில்தான் பாஸ் இல்லாமல் எப்படிக் கப்பலில் செல்வது என்ற ஞாபகம் வந்தது. 'புத்தியைச் செருப்பால்தான் அடிக்கணும்!' என்று சொல்லிக்கொண்டார். அவருக்குத் தமது ஆபத்தான நிலைமை அப்பொழுதுதான் தெளிவாயிற்று. உடல்நடுங்கியது.

ஸ்டோருக்கு வந்துவிட்டார். கதவைத் திறந்து, விளக்கை ஏற்றினார். மடியில் இருந்த சில்லறையைப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, சிட்டையை எடுத்து, 'மீனாட்சி பற்று பதினொன்றே காலணா' என்று எழுதினார்.



மறுபடியும் விளக்கு அணைந்தது. காலில் செருப்பை மாட்டிக்கொள்ளும் சப்தம்; பூட்டு கிளிக் என்றது.

முதலாளி வீட்டை நோக்கிச் சருக்சருக்கென்ற செருப்புச் சப்தம்.

முதலாளி காற்றுக்காக வெளியே விசிப்பலகையில் தூங்குகிறார்.

"ஐயா! ஐயா!" என்றார் மீனாட்சிசுந்தரம்.

"என்னவே, இவ்வளவு நேரம்!" என்று புரண்டுகொண்டே கொட்டாவிவிட்டார் முதலாளி ஐயா.

"இல்லே, சோலி இருந்தது. எம்பத்துலே இன்னக்கி பதினொண்ணேகாலணா எழுதியிருக்கேன்!" என்றார் மீனாட்சிசுந்தரம். அப்பொழுதும் அந்த நாவறட்சி போகவில்லை.

"சரி! விடியனெ வரப்போ மூக்கனெ வண்டியைப் போட்டுக்கிட்டு வரச்சொல்லும். சந்தைக்குப் போகணும்!" என்றார். சொல்லிவிட்டுக் கொடுங்கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டார்.

மீனாட்சிசுந்தரம் முதலாளி ஐயாவைச் சற்றுநேரம் பார்த்துக்கொண்டே நின்றார். அப்புறம் மெதுவாகத் திரும்பி நடந்தார்.

### நூல் வெளி



சிறுகதை மன்னன் என்று போற்றப்படும் புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ.விருத்தாசலம். சிறுகதைகளில் புதுப்புது உத்திகளைக் கையாண்டவர் என்று இவரைத் திறனாய்வாளர்கள் போற்றுகின்றனர். நூற்றுக்குமேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். சில திரைப்படங்களுக்குக் கதை, உரையாடலும் எழுதியுள்ளார். கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், சாபவிமோசனம், பொன்னகரம், ஒருநாள் கழிந்தது போன்றன இவரது சிறுகதைகளுள் புகழ்பெற்றவை.

மணிக்கொடி இதழில் வெளியான புதுமைப்பித்தனின் சிறுகதை ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த யாரேனும் ஒருவரைப் பற்றிய செய்தியை அறிந்துவந்து வகுப்பறையில் பகிர்க.

## மதிப்பீடு

மனித யந்திரம் கதையை மீனாட்சிசுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.

கற்கண்டு

இயல் எட்டு

# யாப்பு இலக்கணம்

2852EH

பாவலர்கள் தம் உள்ளத்தில் தோன்றும் உயர்ந்த கருத்துகளைப் பாடல்களாகப் படைக்கின்றனர். குறிப்பிட்ட வடிவத்தில் இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதைகளை மரபுக்கவிதைகள் என்பர். இலக்கணக் கட்டுப்பாடுகளின்றிக் கருத்துக்கு மட்டும் முதன்மை கொடுத்து எழுதப்படும் கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். மரபுக்கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் யாப்பு இலக்கணம் எனப்படும்.

யாப்பு இலக்கணத்தின்படி செய்யுளுக்கு உரிய உறுப்புகள் ஆறு. அவை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவாகும்.

## எழுத்து

யாப்பிலக்கணத்தின்படி எழுத்துகளை மூன்றாகப் பிரிப்பர்.

அவையாவன:

குறில் – உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில்

நெடில் – உயிர்நெடில், உயிர்மெய் நெடில்

ஒற்று – மெய்யெழுத்து, ஆய்த எழுத்து

## அசை

எழுத்துகள் ஒன்றோ சிலவோ சேர்ந்து அமைவது அசை. அது நேரசை, நிரையசை என இருவகைப்படும்.

குறில் அல்லது நெடில் எழுத்து, தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் நேரசையாகும்.

(எ.கா.) ந, நம், நா, நாம்.

இரண்டு குறில்எழுத்துகள் அல்லது குறில், நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசையாகும்.

(எ.கா.) கட, கடல், கடா, கடாம்.

## சீர்

ஓர்அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது சீர்.

சீர்களை ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என வகைப்படுத்துவர்.



8th Std Tamil _20-12-2019.indd 182 03-01-2020 19:34:54

### தளை

சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர். முதல் சீரின் இறுதியிலும் வரும்சீரின் முதலிலும் உள்ள அசைகள் எவ்வகை அசைகள் என்பதன் அடிப்படையில், தளைகள் *ஏழு* வகைப்படும்.

### அடி

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டு அமைவது அடி ஆகும். அடி *ஐந்து* வகைப்படும்.

### தொடை

செய்யுளில் ஓசைஇன்பமும் பொருள்இன்பமும் தோன்றும் வகையில் சீர்களுக்கு இடையிலோ, அடிகளுக்கு இடையிலோ அமையும் ஒற்றுமையே தொடை ஆகும். தொடை *எட்டு* வகைப்படும். முதன்மையான தொடைகள் வருமாறு:

1. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **மோனை.**

2. இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது **எதுகை.**

3. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றிவரத் தொடுப்பது **இயைபு.**

4. ஒரு பாடலின் இறுதிச்சீர் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல்சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது **அந்தாதித் தொடை.**

### பாவகைகள்

பா நான்கு வகைப்படும். அவை **வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.**

- வெண்பா *செப்பல் ஓசை* உடையது. அறநூல்கள் பலவும் வெண்பாவால் அமைந்தவை.
- ஆசிரியப்பா *அகவல் ஓசை* உடையது. சங்க இலக்கியங்கள் பலவும் ஆசிரியப்பாவால் அமைந்தவை.
- கலிப்பா *துள்ளல் ஓசை* உடையது. கலித்தொகை கலிப்பாவால் ஆனது.
- வஞ்சிப்பா *தூங்கல் ஓசை* உடையது.

## கற்பவை கற்றபின்

1. எழுத்து இலக்கணத்தின்படியும் யாப்பு இலக்கணத்தின்படியும் எழுத்துகளின் வகைகளை வேறுபடுத்தி ஓர் அட்டவணை உருவாக்குக.

2. வெண்பாக்களால் அமைந்த நூல்களின் பெயர்களைத் திரட்டுக.



8th Std Tamil _20-12-2019.indd 183 03-01-2020 19:34:55

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அசை _____ வகைப்படும்.

   அ) இரண்டு   ஆ) மூன்று   இ) நான்கு   ஈ) ஐந்து

2. விடும் என்பது_____ சீர்.

   அ) நேரசை   ஆ) நிரையசை   இ) மூவசை   ஈ) நாலசை

3. அடி _____ வகைப்படும்.

   அ) இரண்டு   ஆ) நான்கு   இ) எட்டு   ஈ) ஐந்து

4. முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது _____.

   அ) எதுகை   ஆ) இயைபு   இ) அந்தாதி   ஈ) மோனை

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| வெண்பா | - | துள்ளல் ஓசை |
| ஆசிரியப்பா | - | செப்பலோசை |
| கலிப்பா | - | தூங்கலோசை |
| வஞ்சிப்பா | - | அகவலோசை |

**சிறுவினா**

1. இருவகை அசைகளையும் விளக்குக.
2. தளை என்பது யாது?
3. அந்தாதி என்றால் என்ன?
4. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**மொழியை ஆள்வோம்!**

R1CQT9

**கேட்க.**

அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் கதைகளைப் பெரியோர்களிடம் கேட்டு மகிழ்க.

**கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.**

மக்கள் பணியே மகத்தான பணி!



8th Std Tamil _20-12-2019.indd 184 03-01-2020 19:34:55

## சொல்லக் கேட்டு எழுதுக.

ஒரு நாட்டின் தலைவன் வீரம், விடாமுயற்சி, ஈகை, ஆராய்ந்து அறியும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றவனாக விளங்குதல் வேண்டும். அவன் அறம் அல்லாதவற்றை நீக்கி, அறத்தை நிலைநிறுத்த வேண்டும். தான் குற்றம் செய்யுமிடத்து நாணி, தன் தகுதியை நிலைநிறுத்த வேண்டும். குற்றம் கண்டவிடத்துத் தானே நேரில் சென்று ஆராய்ந்து, நெறிமுறை தவறாது நீதி வழங்குதல் வேண்டும். இவ்வாறு விளங்கும் தலைவனை மக்கள், துன்பம் போக்கும் இறை என்றும், இருளை அகற்றும் ஒளி என்றும் கொண்டாடுவர் என்று அயோத்திதாசர் கூறுகிறார்.

## இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.

(எ.கா.) முத்து நன்கு படித்தான். முத்து வாழ்வில் உயர்ந்தான்.

முத்து நன்கு படித்ததால் வாழ்வில் உயர்ந்தான்.

1. மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

_______________________________________________________.

2. எனக்குப் பால் வேண்டும். எனக்குப் பழம் வேண்டும்.

_______________________________________________________

_______________________________________________________.

3. திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகக் கருதப்படுபவர். அவர் பதினெண் சித்தர்களில் ஒருவராகக் கருதப்படுபவர்.

_______________________________________________________

_______________________________________________________.

4. அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்க வேண்டும். அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்.

_______________________________________________________

_______________________________________________________.

5. குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக்கண்ணி நூலை இயற்றியுள்ளார். நந்தீசுவரக் கண்ணி நூலை இயற்றியுள்ளார்.

_______________________________________________________

_______________________________________________________.



8th Std Tamil _20-12-2019.indd 185 03-01-2020 19:34:55

## அறிந்து பயன்படுத்துவோம்

**பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### விபத்தில்லா வாகனப் பயணம்

சாலைவிதிகளுக்கு உட்பட்டு வாகனம் ஓட்டும் முறைகளை அறிந்து, வாகனங்களை இயக்கினால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.

- ஓட்டுநர் வாகனத்தைச் சாலையின் இடப்புறத்தில் செலுத்துவதுடன், எதிரேவரும் வாகனத்திற்கு வலப்புறமாகக் கடந்து செல்லப் போதிய இடம்விட வேண்டும்.
- சந்திப்புச் சாலைகள், பயணிகள் கடக்கும் இடங்கள், திரும்பும் இடங்கள் ஆகியவற்றை நெருங்கும்போது வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டும். அவ்விடங்களில் இருப்பவர்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராது என்று உறுதி செய்த பிறகே கடந்து செல்ல வேண்டும்.
- சாலைச்சந்திப்பில் நுழையும்போது, அந்தச் சாலையில் ஏற்கெனவே செல்லும் வாகனங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.
- தீயணைப்பு வாகனம், அவசரச்சிகிச்சை ஊர்தி ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்து, அவை தடையின்றிச் செல்வதற்குக் கண்டிப்பாக வழிவிட வேண்டும்.
- எல்லா ஓட்டுநர்களும் தேவையான இடங்களில் கை சைகை அல்லது வாகன எச்சரிக்கை விளக்குகளைத் தவறாமல் பயன்படுத்த வேண்டும்.
- மலைச்சாலைகள், மிகவும் சரிவான சாலைகள் ஆகியவற்றில் கீழ்நோக்கிச் செல்லும் வாகனங்கள், மேல்நோக்கி வரும் வாகனங்கள் பாதுகாப்பாகக் கடந்து செல்ல முன்னுரிமை தர வேண்டும்.

## வினாக்கள்

1. விபத்துகளை எவ்வாறு தவிர்க்கலாம்?
2. கண்டிப்பாக வழிவிட வேண்டிய வாகனங்கள் யாவை?
3. சாலைச் சந்திப்புகளில் எவற்றுக்கு முதலிடம் தர வேண்டும்?
4. மலைச்சாலைகளில் பின்பற்ற வேண்டிய விதிமுறை யாது?
5. வாகனம் செலுத்தும் முறையை எழுதுக.

## கடிதம் எழுதுக.


புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.



8th Std Tamil _20-12-2019.indd 186 03-01-2020 19:34:55

## மொழியோடு விளையாடு

படத்தைப் பார்த்து எழுதுக.





| | | |
|---|---|---|
| ஓரெழுத்துச் சொல் | ஆ | _______________ |
| இரண்டு எழுத்துச் சொல் | ___________ | _______________ |
| மூன்று எழுத்துச் சொல் | ___________ | _______________ |
| நான்கு எழுத்துச் சொல் | ___________ | _______________ |
| ஐந்து எழுத்துச் சொல் | ___________ | கன்றுகள் |

## நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. அறக்கருத்துகளைப் படித்து, வாழ்வில் பின்பற்றுவேன்.
2. அறவாழ்வு வாழ்ந்த சான்றோர்களைப்பற்றி அறிந்து போற்றுவேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தொண்டு | – | *Charity* | நேர்மை | – | *Integrity* |
| ஞானி | – | *Saint* | பகுத்தறிவு | – | *Rational* |
| தத்துவம் | – | *Philosophy* | சீர்திருத்தம் | – | *Reform* |

## இணையத்தில் காண்க

சமூகச் சீர்திருத்தத்திற்கு உழைத்த சான்றோர்களின் பெயர்ப்பட்டியலை இணையத்தில் தேடித் தொகுக்க.



8th Std Tamil _20-12-2019.indd 187 03-01-2020 19:34:55

இயல் எட்டு

வாழ்வியல்

# திருக்குறள்

FTKF81

## படைச்செருக்கு

1. *கான முயல்எய்த அம்பினில் யானை*
   *பிழைத்தவேல் ஏந்தல் இனிது.**

   பொருள்: காட்டுமுயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதைவிட யானைக்குக் குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும். (பெரிய முயற்சியே பெருமை தரும்.)

   அணி : பிறிதுமொழிதல் அணி

2. *பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்*
   *ஊராண்மை மற்றுஅதன் எஃகு.*

   பொருள்: பகைவரை எதிர்த்து நிற்கும் வீரத்தை ஆண்மை என்று கூறுவர். பகைவருக்கும் துன்பம் வரும்போது, உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

## நட்பு

3. *நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
   *பண்புடை யாளர் தொடர்பு.**

   பொருள்: நல்ல நூல்கள் படிக்கப் படிக்க இன்பம் தருவதுபோலப் பண்புடையவர் நட்பு பழகப் பழக இன்பம் தரும்.

   அணி : உவமைஅணி

4. *நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்*
   *மேற்சென்று இடித்தல் பொருட்டு.*

   பொருள்: நட்பு, சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியது அன்று; நண்பர் தவறு செய்தால் அவரைக் கண்டித்துத் திருத்துவதற்கும் உரியது.

## நட்பு ஆராய்தல்

5. *ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை*
   *தான்சாம் துயரம் தரும்.*

   பொருள்: மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பாராமல் ஒருவனுடன் கொண்ட நட்பு தாம் சாகும் அளவுக்குத் துன்பம் தரும்.



8th Std Tamil _20-12-2019.indd 188 03-01-2020 19:34:55

6. *கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை*
*நீட்டி அளப்பதோர் கோல்.*

பொருள்: நமக்கு வரும் துன்பத்தினாலும் ஒரு நன்மை உண்டு. அத்துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்துகாட்டும் அளவுகோலாகும்.

**மானம்**

7. *பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
*சுருக்கத்து வேண்டும் உயர்வு.*

பொருள்: செல்வம் மிகுந்த காலத்தில் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். வறுமை வந்த காலத்தில் ஊக்கம் குறையாமல் பெருமித உணர்வுடன் வாழவேண்டும்.

8. *குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ*
*குன்றி அனைய செயின்.*

பொருள்: மலையளவு பெருமை உடையவராக இருந்தாலும் குன்றிமணியளவு தவறு செய்தால் அவரது பெருமை அழிந்துவிடும்.

**பண்புடைமை**

9. *பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்.**

பொருள்: பண்பு உடைய சான்றோரின் வழியில் நடப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது; இல்லாவிட்டால் மண்ணுக்குள் புதைந்து அழிந்திருக்கும்.

10. *பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
*கலம்தீமை யால்திரிந்து அற்று.*

பொருள்: தூய்மையற்ற பாத்திரத்தில் வைக்கப்படும் பால் திரிந்துவிடும். அதுபோல நற்பண்பு இல்லாதவன் பெற்ற பெருஞ்செல்வமும் யாருக்கும் பயனின்றி அழியும்.

அணி : உவமையணி



## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆண்மையின் கூர்மை _____.

அ) வறியவருக்கு உதவுதல் ஆ) பகைவருக்கு உதவுதல்
இ) நண்பனுக்கு உதவுதல் ஈ) உறவினருக்கு உதவுதல்

2. வறுமை வந்த காலத்தில் _____ குறையாமல் வாழ வேண்டும்.

அ) இன்பம் ஆ) தூக்கம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்



8th Std Tamil _20-12-2019.indd 189 03-01-2020 19:34:55

3. 'பெருஞ்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) பெரிய + செல்வம் ஆ) பெருஞ் + செல்வம்

இ) பெரு + செல்வம் ஈ) பெருமை + செல்வம்

4. 'ஊராண்மை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

அ) ஊர் + ஆண்மை ஆ) ஊராண் + மை

இ) ஊ + ஆண்மை ஈ) ஊரு + ஆண்மை

5. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

அ) திரிந்ததுஅற்று ஆ) திரிந்தற்று இ) திரிந்துற்று ஈ) திரிவுற்று

பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. இன்பம் தருவது | - | நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம் |
| 2. நட்பு என்பது | - | குன்றிமணியளவு தவறு |
| 3. பெருமையை அழிப்பது | - | செல்வம் மிகுந்த காலம் |
| 4. பணிவு கொள்ளும் காலம் | - | சிரித்து மகிழ மட்டுமன்று |
| 5. பயனின்றி அழிவது | - | பண்புடையவர் நட்பு |

குறுவினா

1. எது பெருமையைத் தரும்?
2. நண்பர்களின் இயல்பை அளந்துகாட்டும் அளவுகோல் எது?
3. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?
4. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.



1. ___________ ___________ ___________ ___________

___________ ___________ ___________



8th Std Tamil _20-12-2019.indd 190 03-01-2020 19:34:55